(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறுங்காலக் கடன் மீதி ரூபா 494,970,217 ஆக இருந்த போதிலும், அதற்காக செலுத்த வேண்டிய கடன் வட்டி அளவு கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியில் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படாதிருந்த அச்சீட்டு செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டிற்காக உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் அறவிடக்கூடிய தண்டப்பணம் மற்றும் தாமதக் கட்டணம் ரூபா 48,472,330 ஆக இருந்த போதிலும், அதற்காக ரூபா 23,449,201 தொகையான ஏற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே மேற்குறித்த ஏற்பாட்டினை கடன்பட்டோரிடமிருந்து கழித்துக் கொள்வதற்குப் பதிலாக விற்பனையிலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.4 **கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விற்பனை சேகரிக்கும் கணக்கில் ரூபா 1,443,477 ஆன செலவு மீதி, விற்பனைக் கட்டுப்பாட்டுக் கணக்குடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாடசாலை பாடப்புத்தகங்களுக்காக மீளாய்வாண்டின் போது விநியோகிக்கப்பட்டிருந்த பட்டியலின் பெறுமதி மற்றும் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் குறித்த பாடப்புத்தக வருமானத்தில் ரூபா 48,907,179 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

2.2.5 **கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் ஒவ்வொரு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | வியாபார கடன்பட்டோர் | 282,283,756 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (ஆ) | தண்டப்பண சீராக்கம் | 5,460,991 | விற்பனைகளுக்குரிய பட்டியல் பத்திரங்கள் |
| (இ) | விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | 236,250 | நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் |
| (ஈ) | வியாபார கடன்பட்டோர் | 946,480 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (உ) | தொங்கல் கணக்கு (செலவினங்களுக்குரிய இணக்கம்) | 4,436,636 | செலவினங்களாக இனங்கண்டு வருமானத்திற்கு பதிவுசெய்வதற்குரிய விபரங்கள் |

2.3 **பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் கடன் அறவீட்டின் செயற்திறனின்மை காரணமாக மீளாய்வாண்டின் ஆரம்ப கடன் மீதியான ரூபா 750,607,688 ஆன அளவில் மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 809,256,090 வரை 8 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இதில் வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து ரூபா 36,029,161 தொகை 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 65,443,837 தொகை 2 இலிருந்து 4 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலமாகவும் அறவிடப்படாதிருந்ததுடன் 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 43,453,396 ஆக இருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் அப்பியாசக் கொப்பிகளை விற்பனை செய்வதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் நியமிக்கப்பட்டிருந்த விற்பனை முகவரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடுவதற்கு இருந்த கடன் மீதி ரூபா 5,747,194 ஆக இருந்தது. இக்கடன் வழங்கல் தொடர்பாக முகவரிடமிருந்து பிணை பெறப்படாதிருந்ததுடன் முன்னால் தலைவரின் பணிப்பின் பேரில் கடன் வழங்கப்பட்டிருந்தது. பிணைகளின்றி கடன் அடிப்படையில் அப்பியாசக் கொப்பிகளை விற்பனை செய்கையில் காசுக்கு

பொருட்களை விற்பனை செய்யும் போது வழங்கப்படுகின்ற 40 சதவீத கழிவு வழங்கப்பட்டிருந்தது.

(இ) அநுராதபுரம் விற்பனை நிலையத்தில் 2012 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 5,491,302 ஆன கடன்பட்டோர் மீதி 2015 மே 30 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இக் கடன்தொகை, கடன் வழங்கும் நடைமுறையிலிருந்து விலகி முன்னால் தலைவரின் வாய்மொழிமூல அறிவுறுத்தலின் கீழ் வழங்கப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவு எய்ப்புச் செய்யப்பட்டிருந்தமை சம்பந்தமாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், இக்கடனை அறவிடுதல் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களிலும் கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்ற அப்பியாசக் கொப்பிகளின் கடன் தொகை அறவிடப்பட வேண்டுமெனவும் அது தொடர்பாக முறையான நடைமுறையொன்றைத் தயாரிப்பதற்காக முன்மொழியப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தேசிய கடதாசி கம்பனிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 01 ஆண்டிற்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 7,989,976 ஆக இருந்தது.

(ஊ) பொருளாதார அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,818,829 தொகையை அறவிடுவதில் நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்பட்டது.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதி ரூபா 59,781,032 தொகையாக இருந்ததுடன், கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 2 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டிருந்ததுடன், தீர்வு செய்யப்படாதிருந்த கடன்கொடுத்தோரின் மீதி ரூபா 22,927,868 ஆக இருந்தது. இது மொத்த கடன்கொடுத்தோரின் பெறுமதியில் 39 சதவீதமாக இருந்தது.

(ஏ) முன்னைய ஆண்டிற்குரிய உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 72,813,671 தொகை கூட்டுத்தாபனத்தினால் 2015 மே 29 ஆந் திகதி வரையிலும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டத்தின் 26(1) ஆம் பிரிவு | 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை கொடுக்கல் வாங்கல் செய்வோரிடமிருந்து சேகரித்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ரூபா 98,399,136 தொகை 2015 யூன் 30 வரை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்புதல் வரி அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு | 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கொடுக்கல் வாங்கல் செய்வோரிடமிருந்து சேகரித்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ரூபா 68,705,093 தொகை 2015 யூன் 30 வரை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் | முன்னால் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் தனிப்பட்ட உதவியாளரால் தனியார் கம்பனியொன்று உருவாக்கப்பட்டு கூட்டுத்தாபனத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது கம்பனிகள் அதிகாரச்சட்டத்திற்குரித்தாக உரிய பிரகாரம் கம்பனிக்காக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரமளிக்கப்படாத நபரொருவரிடமிருந்து ரூபா 46,566,658 பெறுமதியான கடதாசி கூட்டுத்தாபனத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை | தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 2013 ஏப்ரல் 11 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 1,050,000 தொகையான முற்பணத்தை 2015 யூன் 30 வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(IV) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | நான்கு உத்தியோகத்தர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து உத்தியோகபூர்வ வாகனத்திற்கு எரிபொருளுக்காக ரூபா 1,530,113 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.5 ஆம் பிரிவு | முன்னால் தலைவருக்காக வழங்கப்பட்டிருந்த வாகனத்திற்கு மேலதிகமாக மேலும் 02 வாகனங்கள் மீளாய்வாண்டின் யூலை மாதம் வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் தேசத்திற்கு மகுடம் (குளியாப்பிட்டிய) கண்காட்சி விற்பனை கூடம், தகவல் ஊடக அமைச்சின் மூலம் நிர்மாணிக்கப்பட்டிருக்கையில் விற்பனை கூடத்தினுள் பூர்த்தி நடவடிக்கைகளுக்காக மாத்திரம் ரூபா 2,130,576 ஆன செலவினமொன்று கூட்டுத்தாபத்தினால் செலவிடப்பட்டிருந்தமை தொடர்பில் கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக ரூபா 820,000 தொகைக்கு தனியார் கணக்காய்வுக் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தன, மூன்று கணக்காளர்களின் கண்காணிப்பின் கீழ் 50 பேருக்கு மேற்பட்ட பதவியணியினரொன்று கணக்குப் பிரிவில் இருக்கையில் வெளிவாரி நிறுவனமொன்றுக்கு இச்செயற்பாட்டைக் கையளித்தமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாக அவதானிக்கப்பட்டது.

(இ) உழைக்கும் போது வரி ரூபா 994,201 தொகையை ஊழியர்களிடமிருந்து அறவிடாமல் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்ததுடன், இதனை செயற்பாட்டு செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 நிதி விளைவுகள்

---

மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு விளைவு ரூபா 71,153,661 வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றானதுடன் நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 78,095,872 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,942,211 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் விற்பனை வருமானம் ரூபா 97,134,411 ஆல் அதிகரித்திருந்த போதிலும் ஆண்டின் விற்பனைக் கிரயம் ரூபா 77,015,131 ஆலும் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 28,711,539 ஆலும் அதிகரித்தமை இக்குறைவிற்கு முக்கிய காரணங்களாகும்.

### 3.2 கடன் பயன்பாடு

---

மீளாய்வாண்டினுள் அரச வங்கியயொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த குறுங்கால கடன்களின் அளவு ரூபா 601,781,294 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 494,970,217 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. நிர்ணயிக்கப்பட்ட திகதியில் உள்ளவாறு கடன் செலுத்தாமையால் கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்த மேலதிக வட்டி உட்பட ரூபா 53,633,209 தொகை கடன்வட்டியாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் 03 வங்கிக் கணக்குகள் பேணப்பட்டு வருவதுடன், ஒரு வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிகப்பற்று வசதிக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,700,100 ஆன வட்டியொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தின் தொழிற்படு மூலதனம் குறைவடைந்த காரணத்தினால் வருடாந்த குறுங்கால வங்கிக் கடன்களை பெற்றுக்கொள்ளல் அதிகரித்திருந்ததுடன், இந்நிலைமை

காரணமாக மீளாய்வாண்டின் வட்டி மேவுகை விகிதம் செயற்பாட்டு இலாபத்துடன், ஒப்பிடும் போது 49 சதவீதமாக இருந்தது.

(ஆ) விரைவுச் சொத்துக்களில் உள்ளடங்கியிருந்த நடைமுறைச் சொத்துக்களில் 82 சதவீதம் வியாபாரக் கடன்பட்டோரை பிரிதிநிதித்துவம் செய்திருந்ததுடன் அத்தொகையில் ரூபா 92 மில்லியன் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டன. விரைவான கடன் அறவீடு கூட்டுத்தாபனத்தின் திரவத்தன்மையை அதிகரிக்ககூடிய தந்திரோபாய மார்க்கம் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி நடவடிக்கைகளுக்குரிய இருப்பு மட்டம் தீர்மானிக்கப்பட்டு அதன் பிரகாரம் உற்பத்திக்கு தடையில்லாத வகையில் செயற்திறனான இருப்புக் கட்டுப்பாடு மேற்கொள்வது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் காலரீதியில் தேவைப்படாத மற்றும் மெதுவாக அசையும் இருப்புக்களில் கூட்டுத்தாபனம் ஈடுபடுத்தியிருந்த தொகை ரூபா 231 மில்லியாக இருந்தது. இவ்வாறு கட்டுப்பாடொன்றில்லாமல் இருப்புக்களில் பணத்தை முதலீடு செய்தல் காரணமாக கூட்டுத்தாபனததிற்கு செலுத்த வேண்டியிருந்த குறுங்கால கடன் ரூபா 494 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த விற்பனை நடவடிக்கைகளிற்காக சந்தைப்படுத்தல் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் எழுதுகருவி வகைகளின் விற்பனை இலக்குகளை காட்டுகின்ற திட்டமொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனம் எழுதும் கடிதாசிகளை கட்டளையிடுதலின் பலவீனம் காரணமாக மீளாய்வாண்டில் அப்பியாசக் கொப்பிகளின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு தடைகள் ஏற்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அப்பியாசக் கொப்பிகளின் உற்பத்தி 1,698,537 அலகுகளால் அதாவது ரூபா 29,700,420 பெறுமதியால் குறைவடைந்திருந்தது. காலரீதியாக சந்தை தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு

அப்பியாசக் கொப்பிகளின் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை காரணமாக நுகர்வோர் கேள்வியை பூர்த்தி செய்வதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தமை களஞ்சிய இருப்பு பதிவேடு மற்றும் இருப்பு கட்டளையிடும் பதிவேடுகளின் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டன. அதன் காரணமாக சந்தை தேவைப்பாட்டினை உரியமுறையில் நிறைவேற்ற முடியாதிருந்த நிலைமையில் கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்கு மற்றும் விற்பனை வருமானம் குறைவடையக்கூடிய போக்கும் தோன்றியிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தினால் தலைமை அலுவலகம் மற்றும் விற்பனைப் பிரிவொன்றை நிர்மாணிப்பதற்காக 27 பேர்ச் காணி குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டின் போது, முற்பணமாக ரூபா 1,000,000 தொகை பொது முயற்சிகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரமொன்று இல்லாமலும் நிதிசார் சாத்தியவள ஆய்வொன்றும் இல்லாமலும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் கைவிடப்பட்ட காரணத்தினால் செலுத்தப்பட்ட முற்பணத்தை மீள அறவிட முடியாதிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் உற்பத்தி திட்டத்தின் பிரகாரம் ரூபா 730 மில்லியனான பாடப்புத்தகங்கள் ரூபா 9.13 மில்லியன் உற்பத்தி செய்வதற்கு திட்மிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் உள்ளவாறான பாடப்புத்தக உற்பத்தி ரூபா 1.9 மில்லியனால் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் உற்பத்திக் கிரயம் ரூபா 31 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(உ) ரூபா 428.8 மில்லியன் உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியான பாடசாலைப் பாடப்புத்தகங்கள் மற்றும் ரூபா 3.96 மில்லியன் ஆசிரியர் வழிகாட்டி கைநூல்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு 49 நாட்கள் காலதாமதத்தின் பின்னரே கையளிக்கப்பட்டிருந்தது. இத்தாமதம் காரணமாக மீளாய்வாண்டின் போது மாத்திரம் ரூபா 48 மில்லியன் தாமதக் கட்டணமாக கூட்டுத்தாபனம் செலுத்துவதற்கு நேர்ந்திருந்த போதிலும், பாடப்புத்தகங்கள் உற்பத்தியின் செயற்திறனை அதிகரிக்கும் தேவைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

---

மீளாய்வாண்டின் இறுதியில் சேதமடைந்த மற்றும் அசையாத இருப்புக்களின் பெறுமதி ரூபா 1,226,224 மற்றும் ரூபா 154,741 ஆக இருந்ததுடன், இந்த இருப்புக்களை அகற்றுவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதற்காக தேவையான காட்போட் பெட்டிகளை வழங்கும் ஒப்பந்தம் பெறுமதி சேர் வரிப் பெறுமதியுடன் ரூபா 7,067,905 தொகைக்கு தனியார் நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. கொள்வனவிற்கான முறையான கூறுவிலையொன்று இல்லாமலும் பெட்டியொன்றின் சந்தையில் காணப்படும் விலையான ரூபா 25 இற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 66 வீதம் கொள்வனவு செய்த காரணத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,508,390 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 7.9.1 ஆம் பிரிவின் படி குறைந்த விலையுடன் கூடிய கூறுவிலை தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக கூடிய நான்காவது விலையைச் சமர்ப்பித்திருந்த மேற்குறித்த கம்பனிக்கு வழங்கிய காரணத்தினால் ரூபா 864,500 ஆன நட்டமொன்று கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது.

(இ) 650 மெற்றிக் தொன் வெள்ளை அச்சடித்தல் கடதாசி கொள்வனவு செய்வதற்காக தொழில்நுட்ப குழுவால் மதிப்பீடு மேற்கொள்ளப்படாதிருக்கையில் இக்கொள்வனவிற்காக இரண்டாவது ஆகக்கூடிய விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. குறைந்த விலையுடன் கூடிய வழங்குனர் தெரிவு செய்யப்படாமையால் ரூபா 860,600 ஆன நட்டமொன்று கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது.

## 4.5 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் பத்து ஊழியர்கள் ஊடக தகவல் அமைச்சுக்கும் திறன் அபிவிருத்தி அமைச்சுக்கும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் சம்பளங்கள், மேலதிகநேரம் ஏனைய படிகள் உள்ளடங்களாக மீளாய்வாண்டின் போது ரூபா 3,731,108, தொகை கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. இவ் ஊழியர்களில் 07 பேர் கூட்டுத்தாபனத்திற்கு ஆட்சேர்க்கப்பட்ட திகதியிலிருந்து ஊடக தகவல் அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். திறன் அபிவிருத்தி அமைச்சுக்கும் விடுவிக்கப்பட்டிருந்த ஊழியர் தொடர்பாக எதுவித தகவல்களும் கூட்டுத்தாபனத்திற்கு

சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், எதுவித கண்காணிப்பொன்றில்லாமல் தொடர்ச்சியாக சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 48 ஏக்கர் காணியில் 13 ஏக்கர் 2ரூட் 06 பேர்ச் கைத்தொழில் கிராமமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், கையேற்றவர் தொடர்பில் விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 686 ஆக இருந்த போதிலும், உள்ளவாறான எண்ணிக்கை 578 ஆக இருந்தமையால் வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை 108 ஆக இருந்தது. அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 90 ஊழியர்களுக்கு வெற்றிடங்கள் காணப்படாத சேவை வகுதிகளுக்கு அங்கீகாமொன்று இல்லாமல் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்குப் புறம்பாக அமைய அடிப்படையில் 21 ஊழியர்களும் தற்காலிக அடிப்படையில் 12 ஊழியர்களுமாக 34 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) 2009 யூன் 01 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 30 இன் மூலம் உள்ளீர்க்கப்பட்ட அரச அச்சீட்டுக் கூட்டுத்தாபனத்தின் பதவியணியினருக்கு உள்ளடக்கப்படாத மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி (HM 1-1) செயற்பாட்டு முகாமையாளரும் (MA3) செயற்திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர் போன்ற புதிய பதவிகள் ஏற்படுத்தப்பட்டு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

**4.7 வாகனப் பாவனை**

---

அரசாங்க அச்சக கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சட்டரீதியற்ற முறையில் உப தலைவர் பதவிக்காக உத்தியோகத்ரொருவர் நியமிக்கப்பட்டு அவருக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனத்திற்காக ரூபா 731,625 தொகையும் போக்குவரத்து வசதிகளுக்கு உரித்தற்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்காக எரிபொருள் மற்றும் போக்குவரத்து படிகளாக ரூபா 1,215,464 தொகையும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பும் நல்லாளுகையும்

### 5.1 கொள்வனவுத் திட்டம்

கொள்வனவுத் திட்டமொன்று தயாரித்திருந்த போதிலும், கொள்வனவு வழிகாட்டியிலிருந்து விலகி செயற்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் முறையான இருப்பு கட்டுப்பாட்டு முறைமை பின்பற்றப்படாத காரணத்தினால் கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் கொள்வனவுத் திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும், உள்ளவாறான மீதிகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு
(இ) கொள்வனவுகள்
(ஈ) நிதி முகாமைத்துவம்
(உ) வாகன பயன்பாடு
(ஊ) ஆளனி முகாமைத்துவம்
(எ) இருப்புக் கட்டுப்பாடு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

## 2.2 நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 01

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுடன் ஒன்று பதிலிறுப்பு செய்யாது இனிவரும் காலங்களில் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 02

எதிர்வரும் ஆண்டுகளில் இருப்புக்களின் பெறுமதி, தேறிய திரண்ட பெறுமதி வரையில் பதிவு செய்து குறைக்கப்பட்ட முறை நிதி கூற்றுக்களில் வெளிக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 07

நிதிப்பாய்ச்சல் தயாரிக்கும் போது நிதி கூற்றுக்களில் பல்வேறு சீராக்கல்களை செய்ய வேண்டும். உதாரணமாக தொழிற்பாட்டு ரீதியாக திரட்டப்பட்ட வரவுகளை கணக்கிடும் போது தேய்மானம் மீண்டும் இலாபத்தில் சேர்க்கப்படும். எனவே ஏனைய சீராக்கல்களில் தேறிய பெறுமதி இவ்வாறு கடந்த ஆண்டின் சீராக்கலாக தொழிற்பாடுகளில் திரட்டப்பட்ட நிதியத்திற்கு செம்மையாக்கப்படும். எனினும் இயன்றளவு உரிய தரங்களுக்கு அமைவாக செயற்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 08

2013 ஆம் ஆண்டு வரை இ.க.நி.இல 08 கு ஏற்ப கடந்தகாலத்திற்கு ஏற்ப நிதி கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்படவில்லையென்பதுடன், 2015 ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்படும் நிதி கூற்றுக்களிலிருந்து இந்த சீராக்கலை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் செய்யப்படும்.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 12

மேற்படி தரத்திற்கு ஏற்ப தேவையான வெளிப்பாடுகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 16

முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டுள்ள, தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் சொத்துக்களின் நிதி பெறுமதிகள் மற்றும் சதவீதம் பற்றி பொருத்தமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், கடன் பெற்றுக்கொள்ளும் போது வழங்கப்பட்டுள்ள அனைத்து பிணைகள் பறறி எதிர்வரும் ஆண்டுகளில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 19

எதிர்வரும் ஆண்டு தொடக்கம் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும்.

(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 23

2014 ஆம் ஆண்டில் இவ்வாறான செலவினங்களை கண்டறிய முடியாமையானது, குறித்த ஆண்டில் இடம்பெற்ற சகல கடன் பெறுவனவுகளும் மூலப்பொருள் இறக்குமதிக்காக ஒதுக்கப்பட்டதால் அவை மூலதனமயமாக்கலுக்கு சாத்தியப்படாது என்பதால் ஆகும்.

(ஐ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 24

மேற்படி தரங்களுக்கு ஏற்ப வெளிப்படுத்தல்களை எதிர்வரும் ஆண்டுகளில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஒ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39

கடன்பட்டோர் பற்றி அறிக்கையிடல் மேற்படி தரத்திற்கு ஏற்ப மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்

இணை அமைச்சினதும் அறிவுறுத்தலுக்கு அமைவாக, ஐயக்கடன் பற்றி முறையான ஆய்வொன்று இது வரை மேற்கொள்ளப்படவில்லையென்பதுடன், இதற்கு அமைய 2015 ஆண்டில் அறவிட முடியாக் கடன் மற்றும் அறவிட முடியாக் கடனாக நீக்கி விடவேண்டிய தொகையை சரியாக தீர்மானிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) 2012 ஆம் ஆண்டு செலுத்த வேண்டிய தேசத்தை கட்டியெழுப்புதல் வரி செலவினம் சரியான பொறுப்பாக காட்டப்பட்டுள்ளது.

(ஆ) இற்றைவரை ஆண்டிறுதியில் காணப்பட்ட குறுங்கால கடன் மீதிக்கான வருமதி வட்டி கணக்கிடப்படவில்லையென்பதுடன், 2015 ஆண்டு தொடக்கம் இவ்வாறு கணக்கிடப்பட்டு கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) 2014 ஆண்டில் முதல் தடவையாக பாடப்புத்தகங்கள் மற்றும் ஆசிரியர் கைநூலுக்கான தாமதக் கட்டணத்திற்கு கணக்குகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டமையானது கடந்த ஆண்டுகளில் அறவிடப்பட்டிருந்த தண்டப்பணத்தின் சராசரியை மையமாகக்கொண்டாகும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறை ஒதுக்கீடுகளுக்கு ஏற்ப தண்டப்பணம் 2014 ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டதுடன் 2015 ஆண்டில் தீர்க்கப்பட்ட விலைப்பட்டியல்களில் குறைக்கப்பட்டிருந்தமையால் உரிய சீராக்கல்கள் 2015 லேயே மேற்கொள்ள முடியும்.

(ஈ) 2012, 2013 ஆண்டுகளுக்காக கணக்காய்வு கட்டணம் கோரப்பட்டிருக்கவில்லையென்பதுடன், 2014 ஆண்டுக்காக கணக்காய்வு கட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனினும் முன்கொண்டு வரப்பட்ட சென்மதி செலவினங்களில் போதுமான ஒதுக்கங்கள் கணக்காய்வு கட்டணத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2.2.4 இணங்காத கட்டுபாட்டு கணக்குகள்

(அ) 2015 ஆண்டில் இது தீர்க்கப்பட்டுள்ளது.

(ஆ) 2015 ஆண்டில் இந்த வித்தியாசம் தீர்க்கப்பட்டுள்ளது.

### 2.2.5 கணக்காய்வில் சாட்சியங்கள் இல்லாமை

(அ) வர்த்தக கடன்பட்டோர்

ஏதிர்காலத்தில் சகல கடன்பட்டோருக்கான மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) தண்டப்பண சீராக்கல்

இதற்குரிய பற்றுச்சீட்டுக்கள் 4 ஆண்டுகள் பழைமையானதாக இருந்த போதும் அவற்றை கணக்காய்விற்கு பெற்றுக்கொள்ள முடியும்.

(இ) சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்

அப்போதைய தலைவரின் அறிவுறுத்தலின் படி 03 வாகனங்கள் பொலனறுவை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் சந்தைப்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் உச்ச வரையறை 2100 கி.மீ எனவும் இதற்கென வாகனமொன்றுக்குரிய வாடகை 78,750.00 ரூபா என்ற அடிப்படையில் 03 வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

(ஈ) வர்த்தக கடன்கொடுத்தோர்

எதிர்காலத்தில் சகல கடன்கொடுத்தோருக்கும் மீதியை உறுதி செய்யும் கடிதம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அது பற்றிய சுருக்கமொன்று 20.05.2015 ஆம் திகதி கணக்காய்வு உத்தியோகத்தருக்கு பெக்ஸ் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ) தொங்கல் கணக்கு

நிதியாண்டு இறுதியில் தொங்கல் கணக்கு சீராக்கப்பட்டுள்ளது. எனவே நிதி கூற்றுக்களில் வெளிக்காட்ட தேவையில்லை. சாட்சியங்கள் அல்லாத அல்லது ஆவணங்கள் அற்ற ரூ. 4436636 மீண்டும் இலாபத்தில் சேர்க்கப்பட்டு உரிய பொறுப்பு 2015 இல் நீக்கப்படும். எதிர்காலத்தில் அனைத்து கடன்கொடுத்தோருக்கும் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்படும்.

**2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) 2013 ஆண்டில் கடன்பட்டோர் மீதி ரூ. 750,607,688/=. இது 2014 இல் ரூ. 809,256,090/= ஆகும். இதன் அதிகரிப்பு ரூ. 58,648,402/= ஆகும். (7.8%) அத்துடன் 2014 இல் வருமானம் ரூ. 1,334,036,310/= ஆகும். 2013 இல் வருட வருமானம் 1,236,901,899/= ஆகும். இதன் அதிகரிப்பு ரூ. 97,134,411 ஆகும். இதன் வளர்ச்சி விகிதாசாரம், 7.85% ஆகும்.

சகல அச்சிடல் மற்றும் விற்பனை நிலையங்களிலிருந்து 70% வீத கடன் பற்றுச்சீட்டு அடிப்படையில் வருமானம் பெறும் இக்கூட்டுத்தாபனத்திற்கு கடந்த வருடத்தை விட வருமானம் அதிகரித்து கடன்பட்டோர் மீதி அதிகரித்துள்ளது. 2012 ஆண்டு தொடக்கம் பிரத்தியேக கணக்காளர் ஒருவரின் கீழ் கடனை அறவிடலை முறையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) அப்போதைய தலைவரின் தலையீட்டின் கீழ் திரு. ஐ. ஜீ. ஏ. பண்டாரவுக்கு விற்பனை முகவர் பதவி வழங்கப்பட்டது. கொள்வனவில் இருப்பு குறை மற்றும் வேறு கஷ்டங்களின் அடிப்படையில் கடனுக்கும் கைக்காசுக்கும் 40% நிலையான கழிவு வீதமும் வழங்கப்பட்டது.

(இ) இக்கடன் பற்றி பொது முகாமையாளரினால் 06.03.2014 ஆம் திகதி கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அப்போது அனுராதபுரம் விற்பனை நிலையத்தில் பொறுப்பான உத்தியோகத்தராக கடமையாற்றியவருக்கு எதிராக முறையான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. இதனை தவிர கடன்படுனரின் மனைவியான அனுராதபுரம் விற்பனை நிலையத்தில் கடமையாற்றியவரும் கடன்படுனருக்கு ஆவணங்களை வழங்கிய திருமதி. எஸ். சுரஞ்சித்திற்கு எதிராக குற்றப்பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது.

(ஈ) தேசிய கடதாசி கூட்டுத்தாபனம் கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும் ஆவர். கடன்பட்டோர் மீதி ரூ. 9,753,427.27 ஆகும். கடன்கொடுத்தோர் மீதி ரூ 7,460,675.01 ஆகும். கழிவு கடதாசி விநியோகம் மற்றும் அதற்கான கோவை அட்டைகளை கொள்வனவு சில வருடங்களாக மேற்கொள்ளப்பட்டன. இதற்கு அமைய கடன்பட்டோர் மீதி ரூ. 2,292,752.26. ஆகும்.

(உ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் அறவிடுவதற்காக எமது கணக்காய்வு உத்தியோகத்தர்கள் விசேட முயற்சிகளை மேற்கொண்டனர். இதில் 02. 01. 2015 திகதி ரூ. 8,404,393.56 அறிவிடப்பட்டது. எஞ்சிய ரூ 10,226,784 ஐ அறவிட முடியாதுள்ளது. 2015 மார்ச் மாத இறுதியில் கணக்காய்வாளர்கள் இது பற்றி கவனம் செலுத்தவில்லை.

(ஊ) 2 - 5 வருடங்கள் தீர்க்கப்படாத கடன்கொடுத்தோருக்கு கடிதங்கள் அனுப்பி அவர்கள் பதில் அனுப்பவில்லையென்றால் கடன் மீதியை வருமானமாக மாற்றி பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ) உண்ணாட்டரசிறை திணைக்களத்திற்கு ரூ. 54.5 மில்லின் தொகை 19. 06. 2015 திகதி செலுத்தப்பட்டது. இதற்கு அமைய மீதி ரூ. 72,813,671 - ரூ. 54,467,000 மற்றும் ரூ. 18346671/= கும். இதனை தீர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கையை அச்சிடும் போது கடந்த வருடத்திற்குரிய (2013-2014) வருமான வரி தீர்க்கப்பட்டுள்ளது.

## 2.4 சட்டங்கள், ஒழுங்குவிதிகள், நிபந்தனைகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பொருந்தாமை

(அ) 2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டத்தின் 153,155 மற்றும் 160 ஆம் பிரிவுகளின் கீழ் உண்ணாட்டரசிறை திணைக்களத்தினால் விதிக்கப்பட்டிருந்த நிறுத்திய வரி (Withholding Tax) அமுலாக்கப்பட்ட காலத்தில், வாடிக்கையாளர்களினால் நேரடியாக இவ்வரி கூட்டுத்தாபனத்தின் சார்பில் செலுத்தப்பட்டமையால், 25 மில்லியன் ரூபாவிற்கு அதிகமான தொகை 2010 ஆம் ஆண்டளவில் உண்ணாட்டரசிறை திணைக்களத்திற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டது. இது பற்றி சமரசம் செய்யப்படும் வரையில் ஏனைய வரி பணத்தை நிறுத்தாத செலுத்துவதனால் கூட்டுத்தாபனத்தின் திரவத்தன்மையில் பாதிப்பினை ஏற்படுத்துமென்பதால் குறித்த பணத்தை நிறுத்தி வைப்பதற்கு அப்போதைய முகாமைத்துவம் தீர்மானித்தது.

(ஆ) தேசத்தை கட்டியெழுப்புதல் வரியும் கூட்டுத்தாபனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டதுடன், பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்புதல் வரி என்பவற்றிற்குரிய வரி அறிக்கைகள் (Tax returns) மாத்திரம் உண்ணாட்டரசிறை திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. தேசத்தை கட்டியெழுப்புதல் வரி செலவினத்தை கணிப்பிடும் போது கூட்டுத்தாபனத்திற்கு ஏற்க முடியுமான செலவினத்தை கணிப்பிட்டு உண்ணாட்டரசிறை திணைக்களத்திற்கு செலுத்தப்படும். எனினும் தேசத்தை கட்டியெழுப்பு வரியை கணக்குப் பதிவு செய்யும் போது உண்மையாக இதற்காக நாம் செலவிட்ட பணம் அதாவது வாடிக்கையாளரின் ஒரு பகுதி அறவிடப்பட்டிருந்தால் அதனை குறைத்து நிறுவனம் செய்த செலவு மாத்திரம் கணக்குப் பதிவு செய்யப்படும்.

(இ) கோவை இலக்கம் SPC/SU/2013/1/41 இன் கீழ் பத்திரிகை விளம்பரத்தின் ஊடாக கேள்வி பத்திரம் கோரப்பட்டதுடன் இக்கடதாசி 2014 ஆண்டில் எதிர்பார்த்த வருடாந்த அச்சிடல் கட்டளைக்கும், விசேடமாக லொத்தர் சீட்டு அச்சிடலுக்கு இருப்பை பேணுவதற்கும், சனத்தொகை மதிப்பீட்டு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கு அச்சிடலுக்காக கட்டளையிடப்பட்டது. இதற்கு நான்கு கேள்வி பத்திரதாரர்கள் முன்வந்ததுடன், ஸ்டேன்டர்ட் டிரஸ்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனமும் கேள்வியை தாக்கல் செய்தது. எனினும் கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம் சுட்டிக்காட்டியதற்கு அமைவாக எதிர்காலத்தில் இந்நிறுவனதுடன் கொடுக்கல் வாங்கல் நிறுத்தப்பட்டது.

(ஈ) Hyundai Lanka (Pvt) டுவன நிறுவனத்தினால் 20. 04. 2015 திகதி 615,000/= ரூபா செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) இதன் கீழ் உத்தியோகபூர்வ வாகனங்கள் தலைவர், உப தலைவர், பொதுமுகாமையாளர் மற்றும் நிறுவன முகாமையாளர்களினால் பயன்படுத்தப்பட்டுள்ளன. தற்போது உப தலைவர் மற்றும் நிறுவன முகாமையாளர் உரிய பதவிகளிலிருந்து நீங்கியுள்ளனர். எமது நிறுவனம் போட்டித்தன்மையான கேள்விபத்திர நடைமுறைகளில் கலந்துகொண்டு அச்சிடல் நடவடிக்கைகளை பெற்றுக்கொண்டுள்ளதுடன் பாடசாலை பாடப்புத்தக அச்சிடல் போன்ற அரசாங்க அச்சிடல் நடவடிக்கைகளில் கிடைக்கும் வருமானத்தின் அடிப்படையில் இயங்கும் நிறுவனம் என்பதால் கடமைக்காக பல நிறுவனங்களுக்கு செல்ல வேண்டியிருந்தது. அத்துடன் கொழும்புக்கு வெளியே உள்ள நிறுவனங்களுக்கு கடமைக்காக பயணிக்கும் போது அதிக எரிபொருள் செலவாகும். மேலும் வேறு நிறுவனங்களில் நடைபெறும் அரசாங்க உற்சவங்களுக்கும் கலந்துரையாடல்களுக்கு செல்வதற்கும், நாடுபூராவும் உள்ள விற்பனை நிலையங்களை பரிசோதிப்பதற்கும் செல்ல வேண்டியிருப்பதால் கொடுக்கப்பட்ட எரிபொருள் பயன்பாட்டு வரையறையை பேணுவது கடினம்.

(ஊ) KV - 6712 வாகனம் தலைவரின் கடமைக்காக பயன்படுத்தப்பட்டதுடன், JV - 1155 மற்றும் 250-0846 வாகனங்கள் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தலைவரினால் பயன்படுத்தப்பட்டுள்ளது

## 2.5 சிக்கல்வாய்ந்த கொடுக்கல் வாங்கல்கள்

(அ) அப்போதைய தலைவரின் அறிவுரையின்படி குளியாபிட்டியவில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் SPC விற்பனை கூடம் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் கோபிக் ஹோல்டிங்ஸ் நிறுவனத்திற்கு வழக்கபட்டதுடன் கீழ்வருமாறு செலவு மேற்கொள்ளப்பட்டது.

| விடயம் விபரம் | கட்டளை அளவு | விலை<br>ரூ. சதம். |
|---|---|---|
| **தேசத்திற்கு மகுடம் விற்பனை கூடம் - 2014** | | |
| 1. எம் டீ எவ் போட், டிஜிட்டல் ஸ்டிக்கர் மற்றும் புத்தக தட்டுகள், விரிப்பு, மின்சார ஒளி மற்றும் தேவையான முடிவுப்பொருள் பயன்படுத்தப்பட்டு கூடத்திற்கு செலவு செய்யப்பட்டது | | 1,635,000.00 |
| 2. திட்டமிடலும் வடிவமைப்பும் | | 150,000.00 |
| 3. போக்குவரத்துச் செலவு | 65,000.00 | |
| 4. பொருத்துகை செலவு | | 15,000.00 |
| | | 1,865,000.00 |
| | 2% NBT | 37,300.00 |
| | 12% VAT | 228,276.00 |
| **மொத்தம்** | | **2,130,576.00** |

(ஆ) அப்போதிருந்த சகல இலங்கை கணக்கீட்டு நியமங்களும் இரத்துச் செய்யப்பட்டு 2012 ஆண்டு தொடக்கம் இலங்கை கண்க்கீட்டு நியமங்கள் (LKAS) மற்றும் நிதி அறிக்கையிடல் நியமங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றை உடனே பின்பற்றுவது கடினமாகும். 2012 ஆண்டுக்காக கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தின் வரலாற்றில் முதல் தடவையாக கணக்காளர் தலைமையதிபதி திணைக்களம் பாதகமான கருத்துரையை செய்திருந்தது. பணிப்பாளர் சபை இதனை கருத்திற்கொண்டு 29.01.2014 திகதி நடைபெற்ற 743 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் தீர்மானம் மேற்கொண்டு பட்டயக்கணக்காளர் நிறுவனமொன்றிடம் ஆலோசனை சேவையை பெற்று 2013 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்குரிய நியமங்களுக்கு அமைவாக நிதி கூற்றுக்கள் தயாரிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக மேற்படி நிறுவனத்தின் ஆலோசனைக்கமைவாக 2013 ஆண்டுக்கான நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதுடன், இதற்கென நிதி பிரிவின் பணியாட் தொகுதியினர் பயன்படுத்தப்பட்டனர்.

கணக்காய்வு அறிக்கையில் நிதி பிரவிற்குரிய பணியாட் தொகுதி கட்டமைப்பாக கருத்திற்கொள்ளப்பட்டிருப்பது சம்பள தயாரிப்பு பத்திரத்தின் படி நிதி, விநியோகம் மற்றும் உள்ளக கணக்காய்வு ஆகிய 3 ஒன்றெனவாகும். நிதி பிரிவு தற்சமயம் பணியாட் தொகுதியில் 31 பேர் மாத்திரம் இருப்பதால் 50 பேருக்கு அதிகமாக நிதி பிரிவில் பணியாட் தொகுதியினர் இருப்பதாக கூறப்பட்ட கூற்று பொய்யாகும்.

(இ) 2006 ஆண்டு 10 ஆம் உண்ணாட்டரசிறை சட்டத்தின் 116 பிரவின் கீழ் 2997 தொடக்கம் அமுலிலுள்ள வருமதி செலுத்துகை பற்றி இச்சட்டத்தில் 114 பிரிவிற்கு அமைய சமர்ப்பிக்கப்பட்ட வரி சுற்றறிக்கை இலக்கம் 6 (வரி மீதான வரி அளவீடு) செலுத்துகை மேற்கொள்ள வேண்டுமென உண்ணாட்டரசிறை அறிவுறுத்தியது. பின்னர் அரச வரவு செலவு ஆவணத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு இசைவாக்கமடைந்து 19 ஆண்டுகளாக வரி சுற்றுநிருபம் இலக்கம் 6 இற்கு ஏற்ப தொடர்ந்து ஊதியம் மீதான வரி செலுத்தப்பட்டுள்ளது.

இது பற்றி 2015.05.21 ஆம் திகதி நடைபெற்ற 756 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் நீண்ட கலந்துரையாடலின் பின்னர் இது பற்றி உண்ணாட்டரசிறை திணைக்களத்திடமிருந்து சரியான தன்மையை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. இதற்கு 2015.06.05 ஆம் திகதி நிதி முகாமையாளர் உரிய ஆணையாளரை சந்தித்து கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இதன் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன) இது சரியென ஆணையாளர் வாய்மொழி மூலம் அறிவித்துள்ளதுடன், இது பற்றிய எழுத்து மூல பதில் ஊதிய வரி செலுத்துகைப் பற்றி வரி (Tax Audit) கணக்காய்வொன்றை மேற்கொண்ட பின் வழங்குவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. எனினும் 2016 ஜுன் மாதம் தொடக்கம் உரிய வரியை ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 3. நிதி பகுப்பாய்வு

### 3.1 நிதி பெறுபேறு

இது பற்றி கூடிய கவனத்துடன் நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.2 கடன் பயன்பாடு

வருடாந்த விற்பனையை அதிகரிப்பதற்கு உற்பத்தி மற்றும் இருப்பு மட்டத்தை பேணுவதற்காக கூடுதல் மூலப்பொருட்களை பெற வேண்டியிருந்தது. இதற்காக மேலதிக நிதி தேவையில்லையென்பதால், குறுங்கால கடன் வங்கியிலிருந்து பெறுவதை விட வேறு வழி கிடையாது

எமது முக்கிய வாடிக்கையாளரான கல்வி வெளியீட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் பற்றுச்சீட்டுக்கள் அவ்வப்போது தீர்க்கப்படுமாயின் குறித்த குறுங்கால கடனை உரிய திகதியில் தீர்க்க முடியும். எனினும் வருட இறுதியில் வழங்கப்படும் பற்றுச்சீட்டு அடுத்த வருடம் ஏப்பரல், மே மாதங்களிலேயே தீர்க்கப்படுகிறது. எனவே குறித்த கடன் நிலுவையில் இருக்கும்.

அத்துடன் அப்பியாசக் கொப்பிகள் உற்பத்திக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட குறுங்கால கடனையும் தீர்க்க முடியாமைக்கான காரணம் அப்பியாசக் கொப்பிகள் விற்பனையில் 80%க்கு அதிகமானவை கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால், வருட இறுதி திகதியில் குறித்த தொகை நிலுவையாக இருப்பதாகும். இதனால் 2014 டிசம்பர் 31ம் திகதியளவில் நிலுவையாக காணப்படும் குறுங்கால கடன் அளவு ரூ. 494,970,217 என்ற உச்சளவில் காணப்படும்.

### 3.3 தொழிற்பாட்டு மூலதனம்

(அ) தொழிற்பாட்ட மூலதனத்தை அதிகரிப்பதற்கும் வருடாந்த வருமானத்தை அதிகரிப்பதற்கும் விற்பனை பிரிவை செயற்றிறன் மற்றும் உற்பத்தித்திறன் மிக்க உபயோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) திறமையுடன் கடனை அறவிட்டு அதன் மூலம் பணப்புழக்கத்தை சீராக பேணுவதற்கு பட்டயக் கணக்காளர் ஒருவரின் கீழ் பணியாட் தொகுதியொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

## 4. தொழிற்பாட்டு பகுப்பாய்வு

### 4.1 முகாமைத்துவ செயலின்மை

வருட இறுதியில் குறுங்கால கடன் பண மீதி அதிகரித்து காணப்பட்டமையானது காலத்திற்கு ஏற்ப தேவையற்ற மற்றும் மெதுவாக அசையும் இருப்புக்களில் நிதி மூதலீடு செய்யப்பட்டமையன்றி வருட இறுதி தவணையில் பாடசாலை பாட புத்தகம் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் இருப்புக்காக உற்பத்திற்கு தடை ஏற்படாத வகையில் மூலப்பொருட்களை இறக்குமதி செய்தமையாகும். உற்பத்தியின் கூடுதலான பகுதி கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால் நிதியாண்டு இறுதி திகதியில் குறுங்கால கடன் மீதியை தீர்க்க முடியாதுள்ளது.

### 4.2 தொழிற்பாட்டு செயற்றிறனின்மை

(அ) 2014 ஆண்டுக்காக விற்பனை நிலையங்கள் மட்டத்தில் ஒதுக்கப்பட்ட விற்பனை பெறுமதி இலக்குகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், “உற்பத்தி திட்டம் - 2014” என்ற தொனிப்பொருளில் 2014 ஆண்டில் விற்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட கூட்டுத்தாபன அப்பியாசக் கொப்பிகள் மற்றும் எழுதுபொருள் பற்றிய ஆய்வறிக்கையொன்றை முகாமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

2015 மற்றும் 2016 காக ஒட்டுமொத்த விற்பனை திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இனிமேலும் இப்படியான நிலைமை ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் வேண்டுகோளுக்கு இணங்க அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொண்ட பின்னர் டீ.எம்.கொம்பகே மாவத்தையில் 27 பர்ச்சஸ் காணியை பாராதீனப்படுத்த முடிந்தமையை அறிவிக்க முடிந்ததுடன், இந்த பாராதீனப்படுத்தலுக்காக ரூ. 25,714,080 பெறுமதியான குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு இதன் ஒழுங்கமைப்பு கட்டணமாக ரூ. 1,000,000 பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எதிர்கால நடவடிக்கை பற்றி பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டதுடன், கொள்வனவு தொடர்பில் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அறிவுரையை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. இதற்கு அமைவாக இது

திறமையான மூலதனமல்லவெனவும், இதற்கு நிதி சாத்தியப்பாட்டை ஆய்வு செய்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது. முன்னாள் தலைவர் திரு. ஹீன்கந்தவின் இராஜினாமாவின் பின்னர் பதவியேற்ற தலைவர் திரு. தசநாயக்க இதன் தேவை கிடையாது என அறிவித்து பணிப்பாளர் சபைக்கு விளக்கமளித்ததுடன், பின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. தேவையை அடிப்படையாக கொண்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சாத்தியவள ஆய்வு செய்யப்படவில்லை.

(இ) 2014 உற்பத்தி திட்டத்திற்கு அமைவாக அச்சிடலுக்காக எமது எதிர்ப்பார்ப்பு 9.13 மில்லியனாகும், எனினும் கல்வி வெளியீட்டு திணைக்களத்தினால் எமக்கு வழங்கப்பட்ட அளவு 8.41 மில்லியனாகும். எனவே எதிர்பார்க்கப்பட்ட அளவை விட 0.72 குறைந்துள்ளது.

ஏற்கனவே எதிர்ப்பார்க்கப்பட்ட பெறுமதி ரூ.730 மில்லியனாக இருப்பினும் சந்தையில் கடதாசி விலை ஏற்றம் மற்றும் சம்பள அதிகரிப்பு காரணமாக ஊழியர் கொடுப்பனவும் அதிகரித்ததுடன் கூடுதலான உற்பத்தி கொள்ளளவை பெற்றுக்கொள்வதற்காக மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் துண்டு பெறுமதிக்கான கொப்பனவும் அதிரித்தது. இதனால் உற்பத்தி செலவினம் அதிகரித்தது.

(ஈ) இந்த தாமத கொடுப்பனவு அதிகரித்தமை காரணமாக இக்கால பகுதியில் இப்புத்தக அச்சிடல் இயந்திரங்களில் லொத்தர் சீட்டு அச்சிடல் மேற்கொள்ளப்பட்டமையாகும். எதிர்காலத்தில் தாமத கட்டணத்தை குறையும் விதத்தை உற்பத்தி செயன்முறையில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் லொத்தர் சீட்டு அச்சிடலுக்கு புதிய இயந்திரம் கொள்வனவு செய்யபட்டுள்ளது.

### 4.3 செயலிழந்த குறை பயன்பாடுள்ள சொத்துக்கள்

(அ) கையிருப்பு பெறுமதியில் உள்ளடக்கப்பட்டுள்ள சேதமடைந்த மெதுவாக அசையும் மற்றும் அசையாத கையிருப்பு பொருட்கள் வருடாந்தம் குழுவொன்றினால் கையிருப்பு பட்டியல்களிலிருந்து நீக்கப்படும். அநேகமாக சேதமடைந்த கையிருப்பு, குழுவினால் நீக்குவதற்கு பரிந்துரைக்கப்பட்ட போதும், அசையாத மற்றும் மெதுவாக அசையும் கையிருப்பு கூட்டுத்தாபனத்தின் எதிர்கால பாவனைக்கு என கருத்திற்கொள்வதாயின் கையிருப்பு பட்டியல்களிலிருந்து நீக்கப்படாது. இவ்வறிக்கையை அச்சிடும் சந்தர்ப்பத்திலும் பிரதான களஞ்சியத்தினால் இனம் காணப்பட்டுள்ள மேற்படி வகையான கையிருப்பு பட்டியலொன்று முகாமைத்துவத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு நீக்க குழுவிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 4.4 ஒப்பந்த முகாமைத்துவத்தின் குறைபாடு

(ஆ) அடிப்படை தேவைகளை அறிந்துகொள்ளல் மற்றும் பொருட்களுடன் விண்ணப்பிக்கும் போது காணப்பட்ட குறைபாட்டின் அடிப்படையில் மேற்படி சம்பவம் நடந்துள்ளது. பகிரங்க பத்திரிகை விளம்பரத்தின் அடிப்படையில் விலைமனு கோரப்பட்டதுடன், உரிய நேரத்திற்கு ஒரு விலைமனு மாத்திரமே கிடைத்துள்ளது. தாமதமாக கிடைத்த விலைமனு கொள்வனவு நிபந்தனை 6.3.2 கீழ் இரத்துச் செய்யப்பட்ட ஒரேயொரு விலைமனு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. செலவு மதிப்பீடு தயாரிக்கப்படும் போது உரிய வகையில் கிரயத்தை இனம் கண்டு முன்கூட்டியே பெற்றுக்கொண்ட செலவு மதிப்பீட்டின் அடிப்படையில் செலவு மதிப்பீடு தயாரிக்கும் போது குறைபாடு இடம்பெற்றுள்ளது.

எனினும் சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தேவையின்படி பெட்டிகளின் தரத்தை மேம்படுத்தி விரைவாக தேசிய பணியொன்றை ஆற்றுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டமையால் மீண்டும் மீண்டும் விலைமனு கோருவதற்கு நேரம் இருக்கவில்லை. குறுகிய காலத்தில் இவ்வுற்பத்தி பணியை விரைவாக சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கு அச்சுப் பணிகள் கையளிக்கப்பட்டன.

(இ) கோவை இலக்கம் SPC/SU/I/2014/10 இன் கீழ் இந்த கேள்வி பத்திரம் அமைச்சின் கேள்வி பத்திர வரையறையின் கீழ் அமைச்சின் கேள்வி பத்திர சபையினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்த கிரயமானது இரண்டு விலைமனுதாரர்களால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக (ITI) கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக தொழில்நுட்ப குழு மற்றும் கொள்வனவு குழு ஆகியன கலந்துரையாடி உச்ச விலைமனுதாரர் விலையை திருத்துவதற்கு இணங்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக கேள்வி பத்திர விலையை குறைத்து கிரயம் மிக பொருத்தமான கடதாசிக்கு பெறப்பட்டுள்ளது. இது போட்டித்தன்மைவாய்ந்த விற்பனை பணிக்காக பயன்படுத்தப்படுவதால் கடதாசியின் தரம் பற்றி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.5 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

(அ) கௌரவ வெகுசன ஊடக அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக ஒப்பந்த அடிப்படையில் 10 ஊழியர்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு அமைவாக சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், தலைவரின் ஆலோசனைக்கு அமைவாக இவர்கள் அமைச்சின் சேவைக்கு விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளபட்டது. இவ்வாறு அமைச்சிற்கு இணைக்கப்பட்ட ஊழியர்களின் கடமையை மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தர்களினால் மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் செலுத்துதல் அங்கீகரிக்க்ப்பட்டதுடன், தலைவரின் ஆலோசனைக்கு அமைவாக கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது.

2015.01.08 திகதி தொடக்கம் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 08 ஊழியர்கள் அமைச்சு சேவையிலிருந்து நீங்கியதால் நிரந்த அடிப்படையில் கடமையிலிருந்து 02 ஊழியர்கள் மாத்திரம் மீண்டும் கூட்டுத்தாபன சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய ஊழியர்கள் கூட்டுத்தாபன சேவையிலிருந்து நீங்கியதால் 2015.01.08 திகதிக்கு பின் இவர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவு செலுத்தப்படவில்லை.

(ஆ) கூட்டுத்தாபன காணியில் 13 ஏக்கர் 02 ரூட் 06 பர்ச்சஸ் பகுதி தற்போது பயன்படுத்தப்படும் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு பாராதீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், தற்போதைய சந்தை பெறுமதிக்கு ஏற்ப மதிப்பீடு செய்து எமது கூட்டுத்தாபனத்திற்கு நிதியை திரட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4.6 பணியாட்தொகுதி நிர்வாகம்

(அ) 2014.12.31 திகதியளவில் காணப்பட்ட 108 வெற்றிடங்களில் 80 வெற்றிடங்கள் வேலை பிரிவுக்குரிய பதவிகளில் நிலவிய வெற்றிடங்கள் என்பதுடன், ஆட்சேர்ப்பு செயன்முறைக்கு ஏற்ப இப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமை NVQ குறிப்பிடப்பட்டிருந்தமையால் இவற்றை நிரப்ப முடியவில்லை. இது பற்றி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரியதுள்ளதுடன் தீர்வு கிடைக்காமையால், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையுடன் கலந்துரையாடி மிக விரைவில் இந்த பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) அமைய அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்களை நிரந்தரமாக்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்த மற்றும் தற்காலிக அடிப்படையில் சேர்க்கபட்டுள்ள ஊழியர்களை காலம் முடிவடைந்த பின்னர் தேவையில்லை எனில் மற்றும் வெற்றிடம் காணப்படவில்லையெனில் சேவை நிறுத்தப்படும்.

(இ) நிறுவனத்தின் தேவைக்காக தொழிற்பாட்டு முகாமைத்துவ பதவியொன்றை ஏற்படுத்துவதற்காக 2012.12.31 திகதி பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன் இதற்கு அமைவாக திரு. எல். ஜீ. ஹேவாவிதாரனவிற்கு பிரத்தியேகமாகும் வகையில் தொழிற்பாட்டு முகாமையாளர் பதவியை ஏற்படுத்துவதற்கும் இதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெறுவதற்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2015.05.24 ஆம் திகதி திரு. எல். ஜீ. ஹேவாவிதாரன ஓய்வு பெற்றுள்ளமையால், இப்பதவி இரத்தாகியுள்ளது. கருத்திட்ட இயக்க உத்தியோகத்தர் பதவி இப்பதவிக்கு நியமிக்கப்பட்டவர்களுக்கு பிரத்தியேகமாகும் வகையில், தற்போது ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் சேவையில் உள்ளார்.

## 4.7 வாகன பயன்பாடு

(அ) உப தலைவருக்கு வழங்குவதற்காக பொருத்தமான வாகனமொன்றை கூட்டுத்தாபனத்தில் அதே காலப்பகுதியில் இல்லாமையினால், வாடகை அடிப்படையில் வாகனமொன்று பெறப்பட்டது. தற்போது ஒதுக்கப்பட்ட வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனமாகும்.

சந்தைபடுத்தல் கருத்திட்டத்திற்காக நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் நீங்கிய பின்னர் மீண்டும் இவ்வாறான நியமனங்கள் செய்யப்படவில்லை. தற்போது இவ்வாறான வாகனங்களோ எரிபொருள் கொடுப்பனவோ வழங்கப்படமாட்டாது.

## 5. கணக்கீட்டு நடவடிக்கைகளும் நல்லாட்சியும்

### 5.1 கொள்வனவு திட்டவரைபை செயற்றிறனான பணிக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 5.2 வரவு செலவு ஆவண கட்டுப்பாடு

வரவு செலவு ஆவணத்தை செயற்றிறனான முகாமைத்துவ நிர்வாக பணிக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 6. கட்டமைப்பும் நிர்வாக பலவீனமும்

இங்கே (அ) முதல் (உ) வரை உள்ள நிர்வாக துறைகள் பற்றி விசேட கவனம் செலுத்தப்படும்.